06

1

யாகாதிற்

தரிசன மாலைச் சதகம்

திருநாகூர் ஹலறத்

ஷாகுல் ஹமீதாண்டகையவர்களின்

திருப்பேராகிய தவசிரேஷ்ட்ட சற்குருநாதா

ஹலறத் மௌலானா மௌலவிஷாஹா

சுல்த்தான் கலீபா சாகிபு ஆரிபுபில்லாஹி

யவர்களின்

சீடர்களிலொருவரும்

திருநெல்வேலியைச் சேர்ந்த மேலப்பாளையம்

மகாவித்வான் ஷாகுல் ஹமீதுப் புலவரவர்களின்

குமாரருமான

நாகூர் தறுகா வாயல் வித்வான்

மீருன்சாகிபுப் புலவரவர்களால்

பாடியது

மேலச் செவ்வல் பு. பால முகியித்தீன் பாவலரவர்களால்

பார்வையிட்டு

பாளையங்கோட்டை பிரிண்டிங் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

அணா 0—8—0

ஹிஜ்ரி 1341

1923

O72'.47
M22
177319

யாகாதிற்
எவ்வாற்ருனு மொப்பற்ற றப்பில்லாலமீன்
கருணைத் தோழர்களி லொருவராயுக முடிவுவரை
வயதருள்பெற்று கடலிலுங் கரையிலும்
அதிகாரம்பெற்ற தீர்க்கதரிசி,

தாதாஹயாத்

சிலுறுநபியையுஞ்

திருநாகூர்ஹலாத் குதுபுல்மஜீது சுல்த்தானுல் லவ்லியா
செய்யிது அப்துல்காதிற் மீறான்

ஷாகுல்ஹமீது பாதுஷா சாகிபு

ஆண்டகையையுந்

தோத்திரஞ்செய்து பாடிய

தரிசன மாலைச் சதகம்

கடவுள் வாழ்த்து

காப்பு

வெண்பா

சீர்சிறக்கு நாகைநகர் செய்யிதப்துல் காதிருடன்
சீர்சிறக் குங்கிலுறு செம்மலையுஞ்—சீர்சிறக்குஞ்
சிந்தைவிழி கொண்டு தெரிசனஞ் செய்வதற்கு
சந்தக் கருணை இறை தா —1

நூன்முகம்

எழுசீர்கழி நெடிலாசிரிய விருத்தம்

செல்வ மெஞ்ஞானப் பேரின்பத் துறையிற்
சிறப்பதா யமர்ந்த தேசிகரை
தொல்லுலகிடத்தின் மும்மலந்தன்னை
துறக்கவைத்தாண்ட சற்குருவை
வல்லவன்றாதர் கிலுற் நபியோடு
வந்து வாயமு தருள்பவரை

கல்விச்சிருடையோர் துதிக்கு நன்னாகை
காதிறையென்று காண்குவனே —1

அன்னையின் கற்பத்தமைந்து நல்லழகா
யருள்மொழிப் பகர்ந்த பூபதியை
முன்னவனருளெல்லாந் திரண்டுருவாய்
முறையுடனுதித்த சற்குருவை
இன்னிதலந்தன்னிற் கிலுறுடன் வந்தெற்
கிருப்பிடங் குறிக்கு மாதவரை
கன்னலங்கழனி சூழு நன்னாகை
காதிறையென்று காண்குவனே —2

கருவினுள்ளிருந்து வெளியிடை குதித்து
கள்வரை கொன்ற நாயகரை
திருவதாயெங்குந்திக மொழிகொண்ட
செம்மலை ஞானலோசனரை
குருவதாய் கிலுறு நபியொடுவந்து
குமுதவா யமு தருள்பவரை
கருணை சேரொலிமார் துதிக்கு நன்னாகை
காதிரையென்று காண்குவனே —3

மதலையா யிருக்கும் பருவத்தின் ஞெம்பை
மாண்புடன் பிடித்த நற்றவத்தை
குதுபுகட் காசின் முகியித்தின் மாபாங்
கொம்பினிற் பூத்த மாமலரை
விதியவன் றூதர் கிலுறுடன்வந்து
வியந்தருள்ப் பொழியுமா முகிலை
கதிவளர் மகிமை நாகை வாழப்துல்
காதிறையென்று காண்குவனே —4

வாயலின்னின்று கேட்பவர் மனம்போல்
வாயினற்பணமளித்தவரை
ஆயவாட்டும் பாற்கவிழ்ந்திடவே
யதை யெடுத்தருந்தும் ரச்சகரை
தூயமெய்கிலுறு நபியுடன் வந்து
துலங்குமெய்வழி யருள்பவரை

காயமென்னாளுமழி விலாதிருக்குங்
காதிரையென்று காண்குவனோ —5

தீயினிலாறு சுவக்கரிச் சாதஞ்
செய்வியா தியற்று மற்புதனை
சேயமாய் குழந்தைப்பருவத்திலீரேழ்
நிரையில்மு தேர்ந்திடுமாசை
தூயமெய்கிலுறு நபியுடன்வந்து
சுகிர்த மெய் யருள் புரிபவனை
காயமெப்பொழுது மழிவிலாதுயர்ந்த
காதிறையென்று காண்குவனோ —6

அருளுறுங்கிலுரில் யாசு நன்நபியை
யடிக்கடி காணுதற்குதனை
மருமலர்த்தடஞ் சூழ் மாணிக்கப்பூரில்
மாணிக்கம்போ லுதித்தவனை
திருவுறுங்கிலுறு நபியுடன் வந்து
செவ்விதழமு தருள்பவனை
கருமுகிலனைய நிதிதருங்காத்றின்
காதிரையென்று காண்குவனோ —7

அரவொடு காடியூர்வனச்செந்து
மன்புறமொழிந்த சுந்தரனை
பாக்தி விண்ணோர்வந்து சந்தித்து
பண்புடன் ஸலாஞ்சொலுமாசை
நாபதிகிலுறு நபியுடன்வந்து
நல்லமு தமிளு மாமணியை
காவுறும் புல்லருளத்திடைகாணு
காதிரையென்று காண்குவனோ —8

ஜின்னெடுத்தேதும் பெண்ணிணை தனது
திருப்பெயர் சொலியலைத்தவனை
பொன்னமர்புயத்து ராஜனின் பிணியை
போக்கியவானகத் தமுதை
அன்னைநேர்கருணை கிலுறுடனென்முன்
னன்புடன் வந்தருள்பவனை

தன்னலைபளிக்கு மறைமொழி யுணர்ந்த
காதிறையென்று காண்குவனே —9

சிந்தைகொண்டிறையோன் பாலினிற்காமில்
செய் கருளென் வுறைத்தவரை
சந்திரவதன பாத்திமாயீன்ற
தனையரை லோக நாயகரை
விந்தையாய் கிலுறு நபியுடன் வந்தோர்
மேனிலங்காட்டு நல்லரசை
கந்தநற் கஞ்ச வாவி சூழ்நாகை
காதிரையென்று காண்குவனே —10

குதுபு முகமத் கவ்தொலிகமலக்
குணமுறுங் காம்பிடித்தவரை
முதுபுகழ்ஞான தீர்ச்சை தந்தாளு
முக்கிய பிரபலக் குருவை
நிதிநிகர்கிலுறு நன்னபியோடென்
னேரில்வந் தருள்புரிபவரை
கதிவளர் நாகைப் பதிக்கரசான
காதிறையென்று காண்குவனே —11

தஞ்சமா யேழாண்டாலையந்தன்னிற்
றனித்திருந்தியற்று மாதவரை
பஞ்சங்கடா கார்ப்பயிர் விளையப்
பயோதராம் பொழியச் செய்பவரை
செஞ்சாண் கிலுறு நபியுடன் வந்து
தீர்ச்சை யெற்கருளுஞ் சற்குருவை
கஞ்சமாந்தடஞ்சூழ் நாகையெம்பெருமான்
காதிறை யென்று காண்குவனே —12

நாதனின் றெனியா லசரீரிமொழியா
னன்னயப் பெயர்பெரும் வேந்தை
வேதமெய் கடலையுண்டு நல்லறிவை
வியப்புற மொழியு மாமுகிலை
பூதலமீது கிலுருடனென்முன்
பொற்புறத் தோன்றுமாமதியை

காதகந்தவிர்த்த மேலவர் துதிக்குங்
 காதிறை யென்று காண்குவனே —13

சித்துடைமலர்க்கை சட்டையினுள்ளே
 தெய்வப்பெண் காட்டு நாயகரை
பத்திப்பிடித்தோர் பவப்பிணி நீக்கிப்
 பதவியிற் சேர்க்கும் ரட்சகரை
வித்தகப்பெருமான் கிலுறுடன் வந்து
 வேண்டிய வரந்தரு நிதியை
கத்தனல் லருள்சேர் நாகைவாழென் பீர்
 காதிரை யென்று காண்குவனே —14

மதமொடு மூன்று மாய் கையை நீத்தோர்
 மனத்திடை பூத்த செம்மலரை
பதியினிற் சிறந்த நாகையிலமர்ந்த
 பார்த்திபான செங்கனியை
துதிபெறுங் கிலுறு நபியுடன் வந்து
 தோன்றுமென் கண்ணினுண் மணியை
கதிர்வளர் மேன்மை தந்தருளப்துல்
 காதிறை யென்று காண்குவனே —15

தேவர் நானுற்றி நான்கு பக்கீர்கள்
 தினந்தினந் தொழுதிடுமரசை
தீவினையகற்றி யடியவர்தம்மைச்
 சிந்தைகொண்டாளும் பொற்குன்றை
பூவகமீது கிலுறுடனன்பாய்
 பொருந்திவந் தாதரிப்பவரை
காவகஞ்சூழு நாகை வாழப்துல்
 காதிறை யென்று காண்குவனே —16

பகருதற்கரிதா மாமணப்பந்தல்
 பத்திவிட்டெரியப் பார்த்வரை
இகபரச் சுகத்தை நீத்துநல்லிறைவ
 னிடந்தனிற் பேசி வந்தவரை
சுகமுடன் கிலுறு நபியொடு வந்து
 சுருதி வாக்கருளுமென் குருவை

ககனமும் புவியும் புகழு நன்னகை
காதிறை யென்று காண்குவனே —17

நாட்டமாய்த் துதிப்போர் தமக்குறும்பாவ
கவைகளை யகற்றும் ரச்சகரை
சேட்டிளம்பரிதி வடிவினுமழகாய்
சீடர்பாற்றோன்று மாண்டகையை
கேட்டிடுமடியே னுற்கருள் புரிய
கினுறுடன் வந்திடு மணியை
காட்டுவாசாகிப் தமக்கு முதாதை
காதிறை யென்று காண்குவனே —18

வாரியிலாழ்ந்த வொருவனை யழைத்து
மனைவிபாற்சேர்ந்திடும் வேந்தை
சிருடன் றாருத் தீன் முப்தியவர்க்கு
செய்மிக வரமருள்பவரை
தாருடைபுயத்து கினுறுடன் வந்து
தயவருள் புரியுமா மதியை
காரினைபழிக்குங் கமலக்கைபத்துல்
காதிறை யென்று காண்குவனே —19

பட்டுலர் மரங்கட் டளிர்த்துலர் சொரியப்
பார்க்க செங்கமலக்கண்ணவரை
திட்டமாய்யெனது கனவினில் வந்து
தீச்சையை யருளு மென் செய்கை
அட்டமாசித்தி பெறுங் கினுறுடனெற்
கருள்புரிந்தாளு மாதவத்தை
கட்டழகுடைய வானவர் துதிக்கும்
காதிரை யென்று காண்குவனே —20

திருமதி வதனவஜூதுத்தீன்றமக்கு
ஜின்னிடர் தீர்க்கு மேந்தலரை
பருவத்திலெந்தன் கனவில் வந்து
பண்பருள் புரிந்திடுந்துறையை
இருவினையகற்றுங் கினுறுடனென்பா
லிடத்தினை தெரிவிக்கு நிதியை

கருணைச்செங்கமலக் கண்ணுடையப்துல்
காதிறை யென்று காண்குவனே —21

நாய்பிடித்தருந்து மான்குட்டியண்டை
நலமுடன் வருத்துமற்புதனை
பாய்வரிவேங்கைப் பிடித்துக்கொன்றவனை
பண்புட லெடுககச் செய்தவனை
தாய்நிகர் கருணை கிலுறுடன் வந்து
தன்னருள் புரிந்திடுங் கவ்தை
காய்மொழிப்பகார ஒலிகளினரசை
காதிறை யென்று காண்குவனே —22

இறந்திடுமேழு வயதுளச்சேயை
இருநிலத்தழைக்கு மாதவனை
திறந்தரு மஜூசியோர்கள்பால் நவங்கள்
செய்துதீன் வழியிற் சேர்த்தவனை
துறந்தவர்க் குதவுங் கிலுறுடன் வந்து
தோன்றிநற் கதியருள்பவனை
கறங்குனேரேழு புவனத்தையாட்டுங்
காதிறை யென்று காண்குவனே —23

மாதவமுயினுத் தீனொலியன்னை
மரித்தவளெழும்பச் செய்தவனை
பாதலம் புகழ் மெஞ்ஞான மாமுறையை
பகரும் சம்பூரணக் குருவை
ஆதரித்தாளுங் கிலுறுடன் வந்தெற்
கருள்புரிந்தாண்டிடுமரசை
காதலாய் நித்தம் புகழ்வரைக்காக்குங்
காதிறை யென்று காண்குவனே —24

ஜபலுல் லவ்லியா மலையினுள் சென்று
தவத்தொலி மாரைப்பார்த்தவனை
நிபுணர்கள் நித்தந்துதித்தடிபரவும்
நீதர் ஷாகுல் ஹமீதரசை
சபபுறக்கிலுறு நபியுடன் வந்திரு
சரணம் புயக் தருங் குருவை

கபிபிறகுலா நபிகுலக் கொழுந்தை
காதிறை யென்று காண்குவனே —25

தந்தைதாய் மாண நாழுணர்ந்தங்கு
சல்திவர் தடக்கஞ்செய்தவரை
நோர்ந்த மெய்கஞ்சுப் பூரிறைகுட்ட
நோயறதீர்த்த மாமருந்தை
சுந்தா வதனகிலுருடன்வந்து
சுகிர்தநல் வாக் கருள்பவரை
கந்தமாமலர்பூஞ் சோலை சூழ் நாகை
காதிரையென்று காண்குவனே —26

பூதங்காத்திருந்த திரவியஞ் சிறந்தப்
பொக்கிஷந் திறக்கச்செய்தவரை
சாதுசற்குணரை சருவண்டலோகந்
தானாக விளங்குஞ் செஞ்சுடரை
நாதனற் றாதர்கிலுறுடன் வந்து
நலந்தருங் கற்பகா டவியை
காதளவோடுங் கண்ணியர் போற்றுங்
காதிறையென்று காண்குவனே —21

சன்யாசி கணமுன் சேரகவ ருதாந்
தரித்துரைப்பகாச் செய்தவரை
வன்மை யொட்டகத்தோ லத்தி கொண்டுடலம்
வருத்தவை யொழும்பசெய்தவரை
இன்மையி லொளிவைகாட்டு நற்கிலுரோ
டிணங்கி வந்தருள் புரிபவரை
ஜன்மமும் பவமும் நீத்தவர்த்துதிக்குங்
காதிறையென்று காண்குவனே —28

நல்வழிபிழைத்த ருவுளி னுவாபை
நச்சுவர்ட்கொன்றுமாய்த்தவரை
மல்வளப்புயத்து மாதவத் தொலிகள்
வணங்கிய பாதபங் கயரை
சொல்வளஞ் சிறந்தகிலுறு நன்பியின்
றுணையொடு வந்தருள்பவரை

கல்வியிற் சிறந்தோர்வாழு நன்னகை
காதிரையென்று காண்குவனே —29

முகம்மதெம்பெருமான் குலமென்னுங் கடலின்
மோனமா யுதித்தொழிற் முத்தை
சகம்பலவண்டஞ் சமைத்தவன் கருணை
தாங்கிய வேதபூசணரை
சகம்பெருங் கிலுறு நபியுடன் வந்துத்
துணைப்பத மலாருள்பவரை
ககனவா ழமா ரணி தினந்துதிக்குங்
காதிறையென்று காண்குவனே —30

கேட்டிரு கமலக்கர மெடுத்தேந்தி
கெஞ்சுவற்கருளும் ரச்சகரை
காட்டினிற் கள்ளரடியினன் மாய்ந்த
கன்னிசே யெழுப்பச்செய்தவரை
தாட்டிகத்துடைய கிலுறுடன்வந்து
தயவருள்புரியுமாரணனை
காட்டினிற் புனலையளித்தவர் குலத்து
காதிறையென்று காண்குவனே —31

புதியவன் மொழியால் முகம்மதுகவ்தாம்
புனிதரின் சிடானேனை
துதிவளர் செய்யிதசன் குத்துசொலியின்
தோன்றலாய்வந்த கண்மணியை
நிதிவளர் கிலுறு நபியுடன்வந்து
நிதமருள்புரியு மாதவத்தை
கதிரவன் வெட்கு மணிதிகழ்நாகை
காதிறையென்று காண்குவனே —32

விக்கிரகத்தை வணங்குவோர் தம்மை
மேன்பெருந் தீனிலாக்குவரை
தக்கபொற்சிலையை சிந்துமா நதியிற்
சூழ்த்திய ஞானதேசிகரை
திக்குக ளெட்டும் புகழ் கிலுறுடனே
திருவருள்புரியு மாண்டகையை

ஹக்கனின்னருள்சேர் நாகையூரப்துல்
காதிறையென்று காண்குவனே. —33

விண்ணள உயர்ந்தகவ்ன் மலைரிசியை
மிதியடி விட்டடித்தவரை
வண்ணமாம் வேற்பிலுற்றிடுஞ்சித்தர்
மறை இசுலாத்திலாக்குவரை
திண்ணியபுயத்து கிலுறுடன்வந்து
தெரிசனந் தந்தருள் குருவை
கண்ணிமையாத மடைந்தையர் வணங்குங்
காதிறையென்று காண்குவனே —34

அண்டமும் புவியி லெழுவகைத் தோற்ற
மனைத்தையும் படைத்தவ னெவிலை
யெண்டிசை யோர்க ளனுதினம்வணங்கி
யேற்றியபத குசேஜயரை
மண்டலமீது கிலுறுடனென்முன்
வந்துவா யமுதருள்மணியை
கண்டினுமினியமறை மொழி யப்துல்
காதிறையென்று காண்குவனே —35

காந்தாற்குன்ற மிளுக்கும் பக்கீர்கள்
கரும்பொன்னைவாத் தொழுதவரை
வாய்ந்த செஞ்சுடரை விளித்துத் தேசிகனை
வாட்டெனவுரைத்த தீனவரை
சார்ந்த நற்பொருமை கிலுறுடன்வந்து
தயவருள்புரியு மண்ணலரை
காந்தி சேர்பாத்தி மாவருள் மகவை
காதிரையென்று காண்குவனே —36

முடம்பிணிதீர்த்து மாதினை மணந்தோன்
முறையுடன் வாழச் செய்தவரை
விடப்பணி யொருவன் சிரசிடத்திருந்து
விதமுறவருத்து நாயகரை
படியினிலுயர்ந்த கிலுறுடன்வந்து
பண்பருள் புரியுமென்செய்கை

கடத்துடை களிறு நிகரொலி யாசை
காதிரையென்று காண்குவனே —37

குடகுதேசத்தி லுறுநதிக் கரையிற்
குழையினா லுணாச் சமைத்தவரை
தடமுறும்புத்துப் புனலற வறுந்த
சாற்றிய வாக்குடையவரை
சுடரொளி துலங்குங் கிலுறுடன்வந்து
தூய்மறைப் பொரு ளருள்பவரை
கடிகமழ்கமல வாவிசூழ் நாகை
காதிரையென்று காண்குவனே —39

நஞ்சினையளித்த வரசன் மாய்ந்திடப்பின்
நலங்கனிந் தெழுப்புந்தீனவரை
சஞ்சலங்கொண்டு வருமயன் பிணியை
தவிர்த்தவன் வாழச்செய்தவரை
விஞ்சைசேர்கிலுறு நபியுடன்வந்து
வேண்டிய வரந்தருமணியை
கஞ்சநல்லுபயப் பதத் துடையப்துல்
காதிறையென்று காண்குவனே —39

பார்த்திப னனுப்புஞ் சதுரங்கசேனை
பார்வையால் மடியவைத்தவரை
சாஸ்திரமுணர் பக்கீர்களையடித்த
ஜனங் குருடாகச் செய்தவரை
நாற்றிசை புகழுங் கிலுறுடன்வந்து
நல்லருள் புரிந்திடுங்குதுபை
காத்தெனைபுரக்குங் ஜெகத சற்குருவை
காதிரையென்று காண்குவனே —40

மண்ணினின் மாந்தர்கைப்படும் பாவை
வகைமிகப் பெருகச்செய்தவரை
பண்ணினிற்சிறந்த மதிப்புடையவர்
பாரெலாந் துதிக்கு நாயகரை
விண்ணவர் போற்றுங் கிலுறுடன்வந்து
விகசிதமுறை யருள்பவரை

கண்ணினுண் மணிநேர் குதுபுகட்காரசை
  காதிரையென்று காண்குவனே —41

உத்தமர் நஜ்முத் தீனொலி சிரசி
  லுறுங்கொம்பை பார்த்தளித்தவரை
சித்தங்கொண்டாசன் கன்றினால் வாவி
  ஜெலமெலா மறுந்தச் செய்தவரை
யெத்திசை முழுதும் போற்றிடுங்கினுறு
  வேந்தலோ டெழுந்தருள் மணியை
கத்தனல் லருள்சேர் குதுபுகட்காசாங்
  காதிரையென்று காண்குவனே. —42

தம்பலந் தன்னுளுறுத்திரண் டுதித்த
  தரும யூசுபையளித்தவரை
வம்பனும் ஜாபாயோகியை நதியில்
  மாய்ந்திடச் செய்த வற்புதரை
அம்புவி மீதுகினுற் நபியொடுவந்
  தணியித ழமுதருள் பவரை
கம்பொலிமாறுப் பழனஞ் சூழ்நாகை
  காதிரை யென்று காண்குவனே —43

பவக்கடல் மீதிலாழ்ந்த மானிடரை
  பதவியிற் சேர்க்கு மாகலரை
தலமெனும் வழியிற்சென்று பேரின்பஞ்
  சார்ந்திடத் தயவருள் பவரை
புவனரச் சகரை கினுற் நபியோடு
  பொற்பதாய் முனம்வரும் பவரை
கவிகளால் வாணர்புகழு நன்னாகை
  காதிரையென்று காண்குவனே —44

முத்திசே ரஜமீ ரடங்கிய காஜா
  முயினுத்தீ னொலியை கண்டவரை
சித்துடைச் சுருதி ஜவாயிருல்கம்சா
  சிறப்புடை னானுணர்ந்தவரை
பத்தியிற் சிறந்த கினுறுடன்வந்து
  பார்த்தெனக் கருள்புரிபவரை

கத்தனை வணங்குமுறை வழிசெலுத்துங்
காதிரையென்று காண்குவனே. —45

வள்ளலா முகம்மதக்கவ் தொலிசொற்போல்
மாமக்கம் போக நாடுவரை
கொள்ளை செய்யாமற் கப்பலைகாத்து
கூறுஞ் சித்தாவிற் சென்றவரை
தெள்ளிய கருணை கிலுறுடன்வந்து
தெரிசன மெற்கருள் பவரை
கள்ளவிழ்மாவ மாலையம் புயத்து
காதிரை யென்று காண்குவனே —46

மதிப்புடனெவர்க்கு மன்னையாமவ்வா
மாதினை தெரிசித்த ஒலியை
பதியினிலுயர்ந்த மக்கத்திற்குபா
பள்ளியிற் புகுந்த நாயகரை
அதிவிதப் புதுமைகிலுறுடன் வந்தெற்
காரண வாக் கருள்பவரை
கதியினை யருளுநாகை வாழப்துல்
காதிரை யென்று காண்குவனே —47

பரிசுத்த மேவுங் குபத்துல்லா வில்
பத்தி தவாபு செய்தவரை
வரிசையை பொருந்துஞ் சபாமறுவாவென்
வரையிடம் ஓடி மீண்டவரை
குரிசிலாங் கிலுறு நபியுடன் வந்து
கொண்டனைத் தாளும் ரச்சகரை
கரிநிகர் மருவா தமக்கரிநிகறுங்
காதிரை யென்றுகாண்குவனே —48

முன் முகியித்தீ னுயகரிருந்த
முறை கல்வத்திடமிருந் தவரை
நன்மதிகொண்டேழ் கச்சினை முடித்த
நாதரை யற்புத வேந்தை
மன்மதிகிலுறு நபியுடன் வந்து
மறை யுபதேசஞ் செய்பவரை கீழ்தள்ளி

கன்மலைபொருவு மொய்ம் புடையப்துல்
காதிரையென்று காண்குவனே. —49

புண்ணியப் பதியா மாமதினவிற்
புகுந்து நக்பியை கண்டவரை
கண்ணியரவ்லாம நங்கினின் மூன்று
நாள்வரை தவத்திருந்தவரை
மண்ணுலகிடத்தி லெனது முன்கிலுறு
மாதவருடன் வருமரசை
கண்ணகல் வாவிப்பழ வஞ்சூழ்சோகை
காதிரை யென்று காண்குவனே 50—

நித்தியமிரவில் மறைகுருன் முழுது
நிகழ்த்தினன் நிமாசு செய்தவரை
சத்தியன்றவரா வாக்குடை முதியோர்
சந்ததம் வலம் வருங்குன்றை
சுத்தசை தன்ய கிலுறுடனென்முன்
தோன்றி நல்வரந் தரும்பொருளை
கத்திய தாங்கக் கடலுடைப்புவியில் •
காதிரை யென்று காண்குவனே —51

காட்ச்சிசே ரிறசூலிடங் கொளுவிஞ்சி
கனியைப் பெற்றருந்து நாயகனை
தாட்ச்சிசெய்பக் கிர் கட்கலை யீந்து
தம்மகந் திறக்கச் செய்தவரை
மோட்சச் மெய்ஞ் ஞானகிலுறுடன்வந்து
முத்திபெற் கருள் புரிபவரை
காட்ச்சியை யடியர் தமக்கரு ளப்துல்
காதிரை யென்று காண்குவனே —52

தொழுவதற்குரிய விரிப்பி னுள்ளிருந்து
சொற்ணக்கா செடுத்திடும் வேந்தை
பழுதற வெளியோர் வுளங்களிகூற
பணங்களை யீந்திடுந் தருவை
முழுமதி நிகறுங் கிலுறுடன் வந்து
முண்டகப்பத மருள்பவரை

கழுகின மருந்தபகை வரைப்பார்க்குங்
காதிரை யென்று காண்குவனே —53

அண்டருந்துதிக்கு மா மக்க நகரி
லாலயங்கட்டிய கவ்தை
தெண்டிறை கடலி லலையுறும் வங்கஞ்
சிறப்புடன் வரவளைத்தவரை
கொண்டலை லோகநாயகர் கிலுறு
கோவுடன் வருமகப்பொருளை
கண்டினு மினியமறை மொழியப்துல்
காதிரையென்று காண்குவனே —54

தனையாராம் யூசுபொலியினுக் கன்பாய்
தன்கிலாபத் தீர்ந்தவரை
நினைவுற வேதமுழுது மோரிறவில்
நிலைபெற யெழுதியீந்தவரை
நனைமலர்வனையும் புயத்துடை கிலுறு
நாயகருடன் வருமதியை
கனைகுறற்கடல் சூழ்புவி புகழ்நாகை
காதிரையென்று காண்குவனே —55

நாதரெம்பெருமான் முகம்மது நபிக்கு
நன்னயச் ஸலாஞ்சொலுபவரை
மாதவரிறசூ லருமைச்சே யென்று
மருமொழிகொடுக்கப் பெற்றவரை
நீதாரங் கிலுறு நபியுடன்வந்து
நிலைமொழியருளுஞ் சுந்தரரை
காதலாய் கவிஞர் புகழுதற்குரிய
காதிரையென்று காண்குவனே —56

பாத்திமாவாசி தெரிசனங்கொடுக்கப்
பாத்திகா ஓதும் நாயகரை
தோத்திரஞ்செய்து நான்குயார்களையுந்
துணைவிளிகொண்டு பார்த்தவரை
நேத்திரம்போன்ற கிலுறுடனென்ற
நேரில்வந் தருள்புரிபவரை

காத்திரத்துடைய ஞானிகட்டுதிக்கும்
காதிரையென்று காண்குவனே —57

பதுரினில் சகிதாம் சாபாக்கடம்மை
பாரத்துரைப்பகிர்ந்த நாயகரை
நதிமிகுநஜபு நகரினின் றாகு
நபியை யன்பாகக் கண்டவரை
நிதிநிகர்கிலுறு நபியுடன் வந்து
நெறிமுறை வாக்கருள் பவரை
நதிமனைமீது நீப நேரொளிறுங்
காதிரை யென்று காண்குவனே —58

பகருதற் கரியபைத்துல் முகத்தில்
பள்ளியுள் சென்ற வாசனரை
ஜெகதலம் புகழ் முன் னநபிகளின் கபுரை
தெரிசனஞ் செய்த மாதவரை
அகவிழி திறக்கச் செய்கிலுறுடனெற்
கருள் புரிந்தாண்டிடும் மணியை
ககமெனச் செல்லு பாவையோடுனைத்த
காதிரை யென்று காண்குவனே —59

உமறுகத்தாபு கட்டும் பள்ளியுள்
ளுறைந் திறைதனை வணங்குவரை
தமருட னெவருந் துதிக்கு நல்லாசை
சாகிபை யருமறை பொருளை
விமல நற்றாதர்கிலுறுட னென்முன்
மேவிடு மாமணிச் சுடரை
கமலக் கைகுவித்து வானவ ரிறைஞ்சுங்
காதிரை யென்று காண்குவனே —60

நல்ல சீர்சுல்த்தா னசிலுக்குறுறாம்
நகரினில்சென்ற மாதவரை
வல்லவ னில்லில் குத்துபா ஓதி
வணங்கி நல்வரங்கொடுத்தவரை
உல்லாசமாண கிலுறுடன் வந்து
ஓங்கு மெய் யருள்புரிபவரை

கல்லினுந்திரண்ட புயத்துடை யப்துல்
காதிரையென்று காண்குவனே —61

அனபியிமாஞ் சிர்சமாதிதானத்தி
லடைந்தவரொடு மொழிந்தவரை
மனமுறைவீரே றில்லினை கற்ற
மகத்துவர் தம்மை கண்டவரை
தினமுமென்னிடத்திற் கிலுறுடன் வந்து
தீர்ச்சை தந்தாண்டிடு மாசை
கனமெனக்கொடுக்குங் கமலக்கை யப்துல்
காதிரையென்று காண்குவனே —62

தகுமதிமுகியித் தீனெலி கபுர்முன்
சார்ந்துஸ் ஸலாஞ்சொல்லுமணியை
செகமிசை யெனதுப் பேரரேயென்று
செப்பிடச்சிறந்த நாயகரை
சுகமுடன் கிலுறு நபியுடன்வந்து
தொல்வினை துயரறுப்பவரை
ககனமேழ்கடந்த நபி குலமணியை
காதிரையென்று காண்குவனே —63

கற்பலா நகரிலடங்கு நல்லுசைனின்
கபுரடுத்துரைத்த மாமதியை
அற்புதத்தொலிமார் கபுர்கள்தோறு
மணித்து நற்சலாஞ் சொல்லுமணியை
தற்பரன்றூதர் கிலுறுடன்வந்து
தயவருள்புரியும் பூசிதரை
கற்பவருளத்திற்காணு நல்லாசை
காதிரையென்று காண்குவனே —64

கண்மணிபோன்ற பூசுபுமகவை
கல்வுத்திருக்கச் செய்தவரை
விண்மணி வஹதா னியத்தெனும்நல்
விரிப்பினிலுறையச்செய்பவரை
வண்மணி கிலுறு நபியுடன்வந்து

வரந்தரும் லோகவிற்பனரை
கண்மணிதனிலு மொய்ம்புடை யப்துல்
காதிரையென்று காண்குவனே —65

மலைவளம்பெரும் பொன்னுணி வாழ்மருதா
மரமிக தளிர்க்கச்செய்தவரை
அலையுறுங் கடலில்வீழ்ந்த நற்றசுபீக்
கனபுட னெடுத்தருள்பவரை
நிலைமைகொள்ஞான கிலுறுடனென்முன்
நேர்த்திடங் குறித்திடுநிதியை
கலையுணர்மகிமை முதியவர் துதிக்குங்
கதிரையென்று காண்குவனே —66

சிந்துவை கொடிக்குள் கடந்து முகல்ல
தீவினிற்சென்ற நாயகரை
விந்தையாய் ஜின்னகரகத்திலடைத்து
வேலையிற் றாழ்த்து மற்புதரை
சந்திரவதன கிலுறுடன்வந்து
தன்னருள் புரிந்திடுங்கோவை
கந்துகட்சேனை மன்னவர்துதிக்குங்
காதிரையென்று காண்குவனே —67

கொடியகஞ்சுற்ற பல்வகை கனியை
குளிரமுதென னுகர்வோரை
வடிவுடை முகல்ல தீவினிற் குபிரர்
வளரிஸ் லாத் திலாக்குவரை
படிமிசை கிலுறு நபியுடன்வந்து
பதவிதந்தருள் புரிபவரை
கடிகமழ்புட்ப வனந்திகழ்நாகை
கதிரையென்று காண்குவனே —68

சம்சுதப்ரேசா மொலிகபுரடியை
தான்சியாரத்துச் செய்தவரை
நம்பு நல்லடியர் தமக்கருள்புரியு
நாதரை நன்னயப்பொருளை
அம்புவிமீது கிலுறுடன் வந்தெற்க்

கருளினைப் பொழியுமா முகிலை
கம்பினமுத்துத் திகழ்த்தட நாகை
காதிரையென்று காண்குவனே —69

கல்லின்மீதிருந்து வங்கநேர்செலுத்திக்
கடலினைகடந்த காரணரை
அல்லினும் பகலுமொருவனற்றியான
மகத்திடைபொருத்து மாதவரை
தொல்லுலகிடத்தின் கிலுறுடன் வந்து
சுகக்கதியருளும் ரச்சகரை
கல்லடைப் பெரிவுனோய் பலதீர்க்குங்
காதிரையென்று காண்குவனே —70

மன்னுத மலையி னிலைபெற நின்று
வணங்கிய மாதவத்தோரை
உன்னத யூசு பொலிகா கிஸ்த்தி
யுடைந்ததைப் பொருத்துமற் புதரை
நன்னய கிலுறு நபியுடனைனது
நாவினி லுமிழ்ந்திடுங் குருவை
கன்னிகா சல நேர் மொய்ம்புடை யப்துல்
காதிரையென்று காண்குவனே —71

தேன்மலர்த் தடஞ்சூழ் காயற்பட்டணத்திற்
றீனவாளைக்க ச்சென்றவரை
மான்விழிமாதை மணந்திடச்சொல்ல
வான்மகழ்காட்டு நல்லாசை
நான்மறை யுணர்ந்த கிலுறுடன்வந்து
நலந்தருஞ் சகல சித்தவரை
கானமலர்ச்சோலை செறிதருநாகை
காதிரையென்று காண்குவனே —72

தாகத்துக்கீந்த தென் னீழக் கரையின்
சலத்தினைக்கைப்ப செய்பவரை
வாகுறத்தோணி செய்தெளியோன்பால்
வழங்கிய ஞானாட்சகரை
ஏகனின் றாதர் கிலுறுடன் வந்தெம்

இன்பமா யருள்புரிபவரை
காகளந்தொனிக்கும் நாகையூரப்துல்
காதிரையென்றுகாண்குவனே —73

நீதர்வாழ் மேலப் பாளையந்தன்னில்
நிஷ்ட்டை கல்வத் திருந்தவரை
சூதறுதீனின் குலத்தவர்வந்துத்
துதித்திட வருள்புரிபவரை
போதகர்போற்றுங் கிலுறுடன்வந்து
பொற்பருள் பொழியும் லோசனரை
காதிரியாவிற்குரியவர் குலத்துக்
காதிரையென்று காண்குவனே —74

இந்து வாங்காபிர் மிகுந்த தென்காசி
யெழில்நகர்சென்ற தேசிகரை
மந்திரச்சிஷர் பிடித்தறுத்தறுந்து
மாட்டினையெழுப்பு மாதவரை
அந்தணர் கிலுறு நபியுடன்வந்தெற்
கருள் புரிந்தாண்டி டுங்குருவை
கந்தாக் குடையார் போரை யப்துல்
காதிரை யென்று காண்குவனே —75

பாவிலை யென்றோர் மாடயந்தனக்குப்
பாவிலை யென்று சொற்றவரை
சாலப்ரவாக வெள்ளத்தில் லலகையை
தாழ்த்தும் தவத்துடையவரை
சில நற்பெருமான்கிலுறுடன் வந்து
சிந்தை கொண்டருள் புரிபவரை
காலங்கண் மூன் றுணர்ந்திடும ப்துல்
காதிரை யென்று காண்குவனே —76

புள்ளிமான் சருமங் கொடுத்த வர்க் கதிகப்
புதையலை காட்டு மன்னவரை
விள்ள றுங் தடஞ் சூழ் பொதிகை மாமலையின்
மேன்முடி சென்ற தாபதரை
வள்ளலாங்கிலுறு நபியுடன் வந்து

மாதவமுறை சொலு மாசை
கன்ளரை தீனில் வாவளைத்தோரை
காதிரை யென்று காண்குவனே —77

பொதிகையிலுற்ற தவரிசி களைந்தின்
பொருந்திடச் செய்யுஞ் சுந்தாரை
கதிபெருந் தப்லே யாலம் பாத்ஷாவை
கண்கொண்டு சந்தித்த மணியை
துதிவளர்கிலுறு நபியுடன் வந்து
தூய்ய சீர்வழி சொல்லும் வேந்தை
கதிருடன் மதியுந்துதிக்கு நல்லப்துல்
காதிரை யென்று காண்குவனே —78

செஞ்சுடர் வெட்குமொளி திகழ்மணார
செறிதரு நாகை வாழிறையை
தஞ்சையா ழரசன் பிணிக் கருமருந்தை
சற்குணம் பொருந்துஞ்சச் சணரை
மிஞ்சிய தவத்திற்கிலுற் நபியோடு
விசிதத்துடன் வரு மதியை
கஞ்சமா முகத்து முதியவர் துதிக்குங்
காதிரை யென்று காண்குவனே —79

மாசிலாமணியை யளவிடர்க் கரிய
மாமறைப் பொருளினுள் பொருளை
நேசித்து வந்தோரிடரினை யகற்று
நிமலரை நின்னயப் பொருளை
தேசுடைகிலுறு நபியுடன் வந்து
திருவரு ளெனக்க நள் முதலை
காசினி யளவிலண்டமும் போற்றுங்
காதிரை யென்று காண்குவனே —80

கூத்தா நல்லூரி லெளியவன் செல்வங்
கொண்டிட வாக்களித்தவரை
சேத்திரத் திருவா ரூருடை ரதத்தைச்
சிறப்புடன் நடத்தி வைத்தவரை
நேத்திரம் போன்ற கிலு றுடன்வந்து

நெறிதவ முறை சொலுமதியை
காத்திரைப் பொருந்துங் கமலக்கையுப் நுல்
காதிரை யென்று காண்குவனே —81

ஏழையா மொருவன் றனக்கு நற்பயிர்க
ளியற்றிடப் பக டளித்தவரை
ஆளு நற்றவத்தி னொலிகளுக்காசாய்
யவனியி லுதித்த புண்ணியரை
நாளுணர்கிலு று நபியுடன் வந்தென்
ஞனி லுமிளும் நாயகரை
காலேகோலியார் போரை யப்துல்
காதிரை யென்று காண்குவனே —82

விள்ளுதற்கரிய மேலே நாகூரில்
வெறுத்துப தேசஞ் செய்தவரை
வள்ளலின் சொல்லே மறுத்திடு மவ்வூர்
வாழ்வறச் சாப மிட்டவரை
விள்ளொணு மகிமை கிலு றுடன்வந்து
மேன் பொருட்கை கருட்பவரை.
கள்ளவிழ் மலர்த தாட்டருமதி யப்துல்
காதிரை யென்று காண்குவனே —83

அடங்க நற்றஞ்சை யாளிறைவன்பா
லணினிலங் காட்டிய குருவை
இடந்தனிற் பக்கீர் குழுவினை குடிசை
இயற்றி தாமதிக்கச் செய்தவரை
திடங்கொளுங்கிலு று நபியுடன் வந்து
தினந்தினந் மருள் புரிபவரை
கடம்படு மேகக் கவி கை யாருவக்குங்
காதிரை யென்று காண்குவனே —84

கிலுறவர் காட்டு மிஸ்க்கந்தர் மனேயில்
கிருபையோ டிருந்த பூரணரை
நலமக்துமான் தீ விடத்தி னற்புதங்கள்
நாகூரி விருந்து பார்த்தவரை
தலேவனே யுண றுங்கிலு றுடன்வந்துத்

தபவருள் புரியு மாரணரை
    கலைமதி வதனத்தொலிக ஞயகனை
காதிரை யென்று காண்குவஞே —85

    கவிறுடன் தப்தர் சைலானி குகையை
கண்டு கையடித் திடுங்குதுபை
    வலிமை சித்திரகூடங்களை பார்த்து
மகிழ்ந்து சுகூறுசெதய்தவரை
    மலிபுகழுடைய கிலுறுடன்வந்து
மதுராவா யமுதரு ளாசை
    கலமிகவனையுமாசர் கடுதிக்குங்
    காதிரையென்று காண்குவஞே —86

சிந்து தேசத்தோர் பற்குச்சி தளிர்க்கச்
    செய்து தீர்ச்சைகொடுத்தவரை
விந்தையாயூசு பொலிக்குமா மணத்தை
    விரும்பிப் பெண்பேசிடுங் குருவை
சந்திரன்போன்று கிலுறுடன் கனவிற்
    தரிசனந்தரு மணிவிளக்கை
கந்தமே கமழு மொய்மபுடைய யப்துல்
    காதிரையென்று காண்குவஞே —87

நவமுறுங் தற்ஞச் சாரியிலடங்கி
    நாகூரில் வந்திருந்தவரை
பவமுறும்புத்து காணீதழ்விண்டு
    பகர்ந்திடப்பகர்ந்த நாயகனை
தவமுறுங் கிலுறு நபியுடன் கனவிற்
    சார்ந்துவந்திடங் குரிப்பவரை
தவர்படுமனத்துள் ளமர்ந்திடா ஒலியை
    காதிரையென்று காண்குவஞே
மங்கையின் கும்பக் கொங்கையைகண்டு
    மாற்றிபின் வாவளைத்தவரை
தங்கியகடலில் பொறுத்தவங்கத்தை
    சலசக் கைகொண்டிழுத்தவரை
சங்கைசேர் கிலுறுநபியுடன் கனவிற்

சார்ந்துதாட் புயந்தரும் குருவை
கங்கையிலுயர்ந்த நதிதிகழ்நாகை
காதிரையென்று காண்குவனே —89

பீடுறும் யூசுபொலிக்கு நற்சுல்த்தான்
பீவியை மணமுடித்தவரை
கூடியூர் தொண்டகளிலொருவர்கட்
குடித்திடத் தண்டஞ்செய்தவரை
வாடைகொள்மேனி கிலுறுடன்வந்து
மலரடி புயந்தருபவரை
காடுவாழ் மிருகம்பேசிடப் பேசங்
காதிரையென்று காண்குவனே —90

குருவியின் குலத்திற் கெழுதுகைச்சீட்டு
கொடுத்தனைத் துரைதயாபரரை
திருமலர்த்துடவை நாகையாள் வாழ்வை
சித்துடைகனதவ வேற்பை
தருமபூபதியை கிலுறுடன்வந்து
சார்ந்தணைத்தாளு மென்குருவை
கருணையங் கடலை யடியவரி றைஞ்சங்
காதிரை யென்று காண்குவனே —91

கொத்துடை பச்சை இரும்பினை சட்டைக்
குள்ளிருந் தெடுத் தளித்தவரை
சுத்த மெய்ஞ்ஞான குமரியை மணந்த
தோன்றலை திருவருட் கடலை
சத்துவக் குணத்து கிலுறுடன் கனவிற்
சார்ந்து வந்தெனக் கருள்பவரை
கத்தனல் லருளை பெற்ற மாமணியை
காதிரை யென்று காண்குவனே —92

மாதருக்காசி பாத்திமா தவத்தால்
மாணிக் கப்பூர் பிறந்தவரை
தீதறு வாஞ்சூர் மீதுகல்வத்திற்
சிந்தை கொண்டிருந்த பூவலரை
பூதலத் தென் முன்கிலுற் நபியோடு
பொறைமறை யருளு மாமதியை

காதலாய் நினைப்போர் சங்கடந் தீர்க்கும்
காதிரை யென்று காண்குவனே —93

காணிக்கை நிதியை தந்த தன் மகனுர்
காண்கக் கிலாலமாக் குவனிர
மாணிக்க மலையை வாநய குணரை
மறுப்படா தெழுந்த செஞ்சுடரை
சேண்முகிலனைய கிலுறுடன் வந்து
திவ்விய வார்தரு மணியை
காணுைப் புதுமை விழைக்குங் காவலரை
காதிரை யென்று காண்குவனே —94

தெளிவுறுங் கைக்கண்ணுடி கொண்டலையிற்
சிதை யுறுங்கல மடைத்தவரை
புளிய நல்விருக்கம் பேசிப் பேசும்
புனிதவாய் கொண்டவற் புதரை
அளிமிகு கருணைகிலுற் நபியோடென்
னருகில் வந்தமுதருள் குருவை
களிவனப்புடைய கண்ணினை யுடைய
காதிரை யென்று காண்குவனே —95

மண்ணினிற் புதைத்த பாதரி நிதியை
மாண்புற காட்டி வைத்தவரை
விண்ணவர் வாழு நகர்க்கிணை நாகூர்
மேவியங் கமைந்த நாயகரை
வண்ண மாமறையின் கிலுறுடன் கனவில்
வந்தெனைப் பார்க்கும் லோசனரை
கண்ணியங் கூந்தல் பாத்திமா யீன்ற
காதிரை யென்று காண்குவனே —96

பூரணப் பொருளை மதிக்கொணு மணியை
பொருவருஞ் சுவன நாட்டரசை
ஆரண முழுது முணர்ந்த சற்குருவை
அணிதருஞ் ஞானக் கண்ணவரை
தாரணி புயத்து கிலுறுடன் வந்து
தன்னருள் புரியுஞ் ரச்சகரை

காரணகுரிசி லானமும் மணியை
காதிரை யென்று காண்குவனே —97

மதிக்கு மெய்ஞ்ஞானப் பேரின்ப வாழ்க்கை
வந்திடச் செய்யீயுந் சுந்தாரை
துதித்திடு மீரான் சாகிபின் பிள்ளையைத்
துலைந்திடச் செய்யும் ரச்சகரை
முதியவர்க் குதவுங் கிலுற் நன்னபியொடு
முனனில் வந்தாளுஞ் சற்குருவை
கதிவளர் நாகைப் பதிதனி லமர்ந்த
காதிரை யென்று காண்குவனே —98

சிந்திக்கு மடிமை நானுமென் மாபுந்
தினகரன் மதிய முள்ளளவும்
வந்தனம புரிந்து பாதிகாமவ்லூறு
வளமுற ஓதவோரிடத்தை
கொந்தலர் புயத்து கிலுறுடன் வந்துக்
குரித்தவை காட்டிடுவ குதுவை
கந்துகமாடு மாடஞ்சூழ் நாகை
காதிரை யென்று காண்குவனே —99

அற்புத வாழ்வை யாரண வாழ்வை
யன்பியாக் கட்புகழ் வாழ்வை
சற்குண வாழ்வைத் தாபர வாழ்வை
சார்ந்தடி யோனையாழ் வாழ்வை
தற்பரன் வாழ்வை கிலுறுடன் வந்து
தயவருள் புரிந்திடும வாழ்வை
கற்புடை வாழ்வை தந்தருள் வாழ்வை
காதிரை யென்று காண்குவனே —100

தேரிசனமாலைச் சதகம் முற்றிற்று

ஷாகுல் ஹமீதாண்டவரை மீது

மெய்ஞ்ஞான கீர்த்தனை

பதம் இராகம் ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு

பல்லவி

காத்திடுவீரே—அப்துல்
காதிரென்பீரே—நிதமுங்

அநுபல்லவி

1. சூஸ்த்திரஞானவழி துலங்குங் கடைக்கண்விழி
நேத்திரகடுவிலங்கும் நெறியை யருள்புரிந்து நிதங் —காத்.

2. அஞ்ஞானமோடிடவே யருள்வந்து கூடிடவே
மெஞ்ஞான வழியருளை மேதினியிற் புரிந்து நிதங் —காத்.

3. மூவெட்டெழுத்ததிலே முதலட்ச் சரங்கனிலே
மேவும்பொருள் கலிமா மேன்மையருள் தந்து நிதம்—காத்.

4. பதிநால் முஷாகிதாவில் பகருமெனக் கதுவில்
கதிஞானமோட்ச்சவழி காட்டியதருள் புரிந்து நிதல்—காத்

5. அட்டாங்கயோக வெளி யாட்ச்சி புரியும் வழி
கட்டாயமாக தந்து கருணையருள் புரிந்து நிதம் —காத்.

6. கலிமா பொருள்தெரிந்து கல்புக்கண்ணலறிந்து
கலையிற் பிடித்திழுத் தேற்றிரக்கும் வகையை சொல்லி
—நிதம்.

7. போற்றுஞ் ஷாகுல்ஹமிதுப் புலவரின் மைந்தன்மீது
போதமெய்ஞ்ஞான வழி புவியிலருள் புரிந்து நிதம்—காத்

பதம். இராகம் சாமி விவேகாநந்தம் யென்ற மெட்டு

பல்லவி

ஷாகுல்ஹமீ தாண்டவா—சகல மறையுணர்ந்த
தருணமீதுன் கருணை வைத்துத்
திருமறையின் சித்தாந்த மருளும்.

அநுபல்லவி

ஏகனை வணங்கிடவே
என்னாளுந் தொழுதிடவே
புகழ்ந்திடவே
யோகம் மடைந்திடவே
யொய்யார மாகிடவே
மோகமெய்ஞ் ஞானவழி
துயர்ந்திடவே.

தருணமீதன் கருணைவைத்துத் திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

1. கோபத்தைப் போக்கிடவே
குணங்கொண்டு வாழ்ந்திடவே
துதித்திடவே
சோபனம் பெற்றிடவே
சுழிமுனையை கண்டிடவே
தாபதர்கள் துதிக்கும் வழி
தெரிந்திடவே

தருணமீதன் கருணைவைத்து திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

2. சோற்றை குறைத்திடவே
சுகயோகம் பெற்றிடவே
யுற்றிடவே
காற்றை பிடித்திடவே
கருவீட்டில் சேர்த்திடவே
போற்றினேனிந்த வழி
தெரிந்திடவே

தருணமீதன் கருணைவைத்து திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

3. தூக்கந்தவிர்ந்திடவே
சூட்ச்சந் தெரிந்திடவே
துடர்ந்திடவே
மூக்குமுனை தொடவே
மூப்பாழ் கடந்திடவே
ஏக்குந் தவப்பொருளை
தெரிந்திடவே

தருண மீதன் கருணைவைத்து திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

4. வாசியிலேறிடவே
மனதிற்குள்ளோடிடவே
தரித்திடவே
நாசிக்குமேல்லன நடுவே
நயனத்திடை நடுவே
நடமாடும் வாலையுடன்
கூடிடவே

தருண மீதன் கருணைவைத்து திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

5. கோட்டைக் கடந்திடவே
கொலுவீட்டுள்ளாகிடவே
பூண்டிடவே
பூட்டுஞ்ஷாகுல் ஹமீது
புலவரின் மைந்தன்மீது
போத மெய்ஞ்ஞா னமுறைச்
சொரிந்திடவே

தருண மீதன் கருணைவைத்து திருமறையின் சித்தாந்தமருளும் —ஷா.

பதம் இராகம் பியாகு ஆதிதாளம் மங்களாரகம்

பல்லவி

ஷாகுல் ஹமீதொலியே சரணம் புகழ்ந்தேன்
தந்தாளு மெய்ஞ்ஞானமே— அடியேன்றனக்கு
தந்தாளு மெய்ஞ்ஞானமே

அனுபல்லவி

ஏகனருள லாயிலா இல்லல்லாகூவின் பொருள்
எந்தன் சுவாசந் தனி லேற்றும் வகை
எனக்கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

1. தத்துவத்தை யொடுக்கிடவே—மனக்குரங்கை
சாத்திரவிழுத்துக் கட்டிடவே
யெத்திசை புகழட்டாங்க யோகந் தெளிந்திடவே
ஏகனிஷ்டை புரிந்திடவே
இவ்வேளை வந்தெனக் கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

2. அருநான் கெழுத்தின்னடுவே—அருளெழுத்தை
அகக்கண்ணிலுற் றிருத்திடவே
ஐம்புல னொடுக்கிடவே ஆறுதாரங் கூடிடவே
இன்ப பொருள் கிடைத்திடவே
இவ்வேளை வந்தெனக் கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

3. வாசலேழுங் கடந்திடவே பிரஸ்த்தாபமான
மண்டல மூன்றுந் தாண்டிடவே
ஆசானை கண்டிடவே அருள்வந்து கூடிடவே
ஈசனை வணங்கிடவே
இவ்வேளை வந்தெனக்கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

4. கண்ணாடி வட்டத்தின் னடுவே இலங்குகின்ற
காட்சியைக் கண்டிடவே
விண்ணேக்கிச் சென்றிடவே மேலுச்சி தொட்டிடவே
என்னாளும் புகழ்ந்திடவே
இவ்வேளை வந்தெனக்கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

5. மேலத்தெருவின் நடுவே யாசானுகின்ற
மேலவனை கண்டிடவே
வாலையைப்ப போற்றிடவே வாமம்பெருகிடவே
பாலையங் குண்டிடவே
இவ்வேளை வந்தெனக்கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்

6. பதவிஞானம் புரிந்திடவே ஷாகுல்கமீது
பாலனுக்கருள் ணிறைந்திடவே
கதஞ்சிரசில் வைத்திடவே காக் தீட்ச்சை பெற்றிடவே
இசபாதம் புகழ்ந்திடவே
இவ்வேளை வந்தெனக்கருள் புரிந்திடுவீர் —ஷாகுல்.

பதம் இராகம் இந்துஸ்த்தான் பாண்டியனின்ற மீனாச்சி என்ற மெட்டு

பல்லவி

காகை மீறு லெனிகவந்தே
கற்பாதை காட்டுமிப்போதே.

அநுபல்லவி

மோகமெய்ஞ்ஞான கூடிடவே
முத்தியருள்பாதை கிடைத்திடவே
ஏகனை தொழுது வணங்கிடவே
எனக்குபதேசஞ் செய்திடவே —நா.

அஞ்சிலொன்றை யறிந்திடவே
ஐம்பொறிவை கண்டு புகழ்ந்திடவே
நெஞ்சமழியா மலிருந்திடவே
நீடித்த வயதருள் பெறவே —நா.

எண்சா னுடம்பை தெரிந்திடவே
ஏகாந்த நிஸ்டை புரிந்திடவே
செஞ்சொற் மெய்ஞ்ஞான பாடிடவே
செல்வப்பேரின்ப முணர்ந்திடவே —நா.

பன்னிருகாற் குதிரை யேறிடவே
பாசவினை மாயை யோட்டிடவே
முன்னவனின் பேரருள் பெறவே
முத்தி வழிகண்டு பிடித்திடவே —நா.

ஐம்பத்தோர்படியை கடந்திடவே
அறுகோண வழியை தெரிந்திடவே
சம்பூர்ண நடன மாடிடவே
தற்பரனைத் தொழுது பணிந்திடவே —நா

அட்டாங்க யோகஞ் சார்ந்திடவே
யான்மாவின் தாவை பெற்றிடவே
துட்ட துற் செய்லை நீக்கிடவே
துறைஞானவழியை கண்டிடவே —நா.

குணங்குடி வாயற் றெரிந்திடவே
குண்டலியின் வடிவை பெற்றிடவே
இணங்கும் பேரின்பம் வந்திடவே
எந்தாய் பாதம் பணிந்திடவே —நா.

மேலாம் வாயாற் றிறந்திடவே
மேலவனைக்கண்டு வணங்கிடவே

தாலத்தில் ஞானம் பகர்ந்திடவே
ஷாகுல் ஹமீதுமைந்தன் பாடிடவே —நா.

பதம் இராகம் இந்துஸ்த்தான்

பல்லவி

சூட்ச்சந் தெரியு மெய்ஞ்ஞான
சுழிமுனை வழியை
சொல்லிவைத்தாழ்வீரே— அப்துல்காதிர்
மீருனென்பீரே.

அநுபல்லவி

1. மூச்சுடன் லாயிலாஹா இல்லல்லாவை
முறைபிடித் தேற்றுதற்கே
காட்ச்சியுடன் வந்தெனக் கருள்புரியும்
காதிற் ஹமீதொலியே —சூழ்ச்சம்.

2. ஐவேடரொன்று இருந்தாசாழ்கின்ற
அரமனை வாசலுக்குள்
மெய்வேடனை காட்டிவைத்தருள் புரியும்
மீருன ஹமீதொலியே —சூழ்ச்சம்.

3. மும்மண்டலங் கடந்தங்கே தெரிகின்ற
முடுக்கடி மாளிகைக்குள்
அம்மையைக் கண்டருள் புரிந்திட கருணைசெய்
தாளும் ஹமீதொலியே —சூழ்ச்சம்.

4. ஈராறு காலுள்ள வாசியை பிடித்துகொண்
டேகன் வழிபுகவே
சீருறு மெய்ஞ்ஞானப் பேரின்பம் புரிந்திடுஞ்
செம்மல் ஹமீதொலியே —சூழ்ச்சம்.

5. ஓங்கார வட்டத்தைக் கண்டுகொண்டொன்பது
ஓட்டைகளடைத்திடவே
பாங்காய்த் துலங்கு மெய்ஞ்ஞான தவ்ஹீதைப்
பகரும் ஹமீதொலியே —சூழ்ச்சம்.

6. அட்டாங்க யோகத்தைப் பெற்றுக்கொண்டேயுல
காட்ச்சி புரிந்திடவே
கட்டாயமாக வெனக் கருள் புரியும்
காதிர் ஹமீதொலியே —சூழ்ச்சம்.

7. ஷாகுல் ஹமீதுப் புலவரின் மைந்தன்
சாற்றுங் கவிக்கிரங்கி
சந்தோச மெய்ஞ்ஞான பேரின்பம் புரியுஞ்
ஷாகுல் கமீதொலியே —சூழ்ச்சம்.

பதம் இராகம் இந்துஸ்தான்

சூட்ச மெய்ஞ்ஞான குருவே தென் நாகூரில் வாழ்

அநுபல்லவி

சாட்ச்சி சேர்ஞானி கௌது ஸமதானி
ஆட்சி சுபுகானி—எனுள் றகுமானி [சூட்ச]

1. தெங்காசி நன்னகரிற் றபோதன ரொருதை
சங்கையுடனருந்த இங்கிதம்போ லழைத்த
ஷாகுல் ஹமீதொலியே கஞ்சசவாயி [சூட்ச]

2. வெற்றிலைத் தாம்பூலத்தால் வேந்தர் பூசுபொலிவை
நற்றவம்போல் வருத்துஞ் சித்து நிலையானகௌது
நாதர் மீருனொலியே கஞ்சசவாயி [சூட்ச]

3. புலவர் ஷாகுல் ஹமீது புத்ரனுக் கெப்பொழுது
சலசமெய்ப் பாதம் நலமென்றன் புயத்திற்
றந்தாழ் பக்ஷென்பீரே கஞ்சசவாயி [சூட்ச]

பதம் இராகம் நொண்டிச் சிந்து.

பல்லவி.

நற்புகழ் மெய்ஞ்ஞானம் பூண்டவா —திரு.
நாகை யப்துல் காதிர்மீருன் சாகிபாண்டவா.

அநுபல்லவி

1. தற்பான னருள் நிறையவே —தன்னை
தானறிந்து நற்றவத் தியானம் பூணவே
துற்குணங்கள் தன்னை நீக்கவே —மன
துக்கம் விட்டொளிந்து சுகஞான துங்கவே
பொற்பதா நந்தியை காணவேஅருள்
புரியுமப்துல் காதிர் மீரான் சாகிபாண்டவா [நற்புகழ்]

2. காயில்லா கனியருந்தவே —அருள்
கட்டைப்பனையின் மதுவை யுண்டுகொள்ளவே
ஓய்வில்லா தியானம் பூணவே —ஒரு
ஊமையுடன் கூடியுரவாடிக் கொள்ளவே
மாய்கை பட்டணங் கடக்கவே —அருள்
மாதவம் புரியுமீரான் சாகிபாண்டவா (நற்புகட்)

3. ஊற்றை சடலந் தெரியவே அதை—
பற்றுப்பார்த்து பச்சைகிழியை தெரியவே
காற்றை யடைக்க தெரியவே —அந்த
காலமும் நீடித்த வயதை தெரியவே
நேத்திரச்சுடர் தெரியவே —ஞான
நெறியை யருள் புரியுமீரான் சாகிபாண்டவா (நற்பு)

4. வேடறைந்து பேர் தெரியவே —அவர்
வேடிக்கை செய்தாடு மைதானந் தெரியவே
மூடுவாசலை தெரியவே —அங்கு
முப்பொருளொன்றான நற்பொருள் தெரியவே
மேடை விளக்கு தெரியவே —தின
மேன்மை யருள் புரியுமீரான் சாகிபாண்டவா (நற்பு)

5. எண்சாணுடம்பை தெரியவே —ஒரு
ஏகபானை தொழு நிஸ்ட்டை தெரியவே
பஞ்சப்புலனை தெரியவே —எங்கும்
பட்டப்பகல்போல் வெளிச்சந் தன்னுள் தெரியவே
நெஞ்சில் நினைவை தெரியவே —தவ
நிஸ்ட்டை யருள் புரியுமீரான் சாகிபாண்டவா —நற்புகழ்

6. ஆணுவந்தன்னை குறைக்கவே —உல
காசைவிட்டொளிந்து ஞானப் பூசைசெய்யவே
ஏணியின்படி கடக்கவே — அருள
இல்லல்லா வென்றகலிமா யேற்றிறக்கவே
கோண மறுவழி கடக்கவே — அங்கு
கொற்றவனை காட்டு மீறான் சாகிபாண்டவா (நற்)

7. காரணத்தின் காட்சி தொணவே எந்தன்
கல்புக்கண் திறந்து ஞான தீர்ச்சைப் பூணவே
ஆரண சூழ்ச்சசத் தெரியவே —ஒரு
ஆதியை யனுதினமும் கல்பில்காணவே
பூரண மெய்ஞ்ஞானியாகவே— அருள்
புரியு மப்துல் காதிர் மீறான் சாகி பாண்டவா (நற்)

8. குணங்குடி வாயற் றெரியவே அங்கு
குண்டலியின் ரூபஞானத்தை தெரியவே
இணங்கும் பேரின்பம் தெரியவே ஆதி
இறைவன்திரு வருளொன்றாகக் கூடவே
மணங்கமழ் வாலை தெரிவே— அருள்
மாதவம் புரியுமீறான் சாகிபாண்டவா (நற்)

9. பீத்தலொன்ப தையுமூடவே —குரு
பீடமிருக்கு மண்டபம் தன்னை தேடவே
சூஸ்த்திரப் பொருளை நாடவே — கவி
சொல்லுஞ் ஷாகுல்ஹ மீது தன்மைந்தன் பாடவே
போற்று மெய்வழியிற் கூடவே—அருள்
புரியுமப்துல் காதிர் மீறான் சாகிபாண்டவா (நற்புகழ்)
பதம் இராகம் தனித்தமெத்தையிற் படுத்துறங்கயிலே.

பல்லவி

சரணமலர்ப் பதம் புயம்பொவே —இனுற்கயியுடன்
சார்ந்து வந்தெனக் கருள் வாந்தரவே —கவி
சாற்றினேன் புகழ்ந்தேற்றினேன் — கதம்
போற்றினேன் ஹமிதென்பீரே

அனுபல்லவி

பிரமஞான வடிவைக் கண்டிடவே—வல்லோனிருக்கும்
பீடஞ்சென்று தெளிவடைந்திடவே—மன
பேதகமற நீத மெய் வழி
யோதும் ஷாகுல் ஹமீதென்பீரே (சரண)

1. ஐனென்னும் கலிமாவுணர்ந்திடவே —வெளிகபுசு
அம்மாரவை கடந்து சென்றிடவே —மறை
ஆரணப் பரிபூரணதிரு
காரணர் ஷாகுல் ஹமீதென்பீரே (சரணமலர்)

2. வாசியின் கலையை பிடித்திடவே —விழிநடுவில்
வாலைமாதுடன் கூடி நின்றிடவே —அருள்
வாசரே மகாராஜரே பிர
காசர் ஷாகுல் ஹமீதொலியே (சரணமலர்பத)

3. காயில்லா கனியை யுண்டிடவே —எழுமகாமை
கடந்து கூவதுக்குள் சென்றிடவே —அப்துல்
காதிரே திருப்பாதரே யருள்
வேதர் ஷாகுல் ஹமீதொலியே (சரணமலர்ப்பதம்)
சூஸ்த்திரப்பொருள் தெரிந்திடவே—முப்பாழ்கடந்து
சுழிமுனையின்னெல்லை தாண்டிடவே —திருச்
சோதியே குரு ஆதியேகவ
நீதிஷாகுல் ஹமீதொலியே (சரணம்)
புகழுஞ் ஞானவழி துயர்ந்திடவே—ஷாகுல்கமீது
புலவர்மைந்தன் கவி பொழிந்திடவே—துதிப்
போதரே திருப்பாதரே மதி
வேதர் ஷாகுல்கமீ தொலியே (சரணம்)

பதம் இராகம் அமார நபிஎன்றமெட்டு

மெய்ஞ்ஞான குரு நாகைமீருனென்பீரே

அநுபல்லவி

மெய்மறைப் போதம் மேவிடும்பாதம்
உய்வழி யெற்கருளும் ஷாகுல் ஹமீதொலி (மெய்)

முச்சுடரான முப்பொருள் மோன
சச்சிதாநந்தமருள் ஷாகுல் ஹமீதொலி (மெய்)
சரியத்தின் வழியை சார்ந்த நற்றெளிவை
தரிசனை காட்டியருள் புரியும் ஹமீதொலி (மெய்)
சூல்த்திரப் பொருளே துலங்கு மெய்யருளே
நெத்திரத்திற் தெரிய காட்டும் ஹமீதொலி (மெய்)
ஐனென்னுங் கலிமா அரிந்த நல்லுலமா
மெய்வழி யெற்கருளும் ஷாகுல் கமீதொலி (மெய்)
ஷாகுல் கமீது சந்ததிமீது
சரணமருள் புரியுஞ் ஷாகுல்ஹமீதொலி (மெய்)

ஷாகுல்ஹமீது ஆண்டவர்கள் புத்திர ரத்தினசிகாமணி

செய்யிது முகம்மது யூசுபுசாகிபொலி ஆண்டகைமீது

சிந்து

இராகம் சேந்திமா நகரந்தனில் மேவிய என்றமெட்டு

சொற்க்கமா நகருக்கிணையா யெங்குந்
தோன்று நாகைப்பதி வாசா —மதிப்
போன்ற மெய்ஞான உல்லாசா —திரு
துங்கமேவிய கங்கை சூழ்புவி
எங்குமே புகழ் தங்கு நாதரே
துய்யவன்திரு மெய் யொலியே என்றனை
தோசமறப் புரிவீரே —தாதா
யூசுபு சாகிபென்பீரே

1. தற்பரன்திரு வற்புத மேவிய
சாகராழான நற்சிலா —அருள்
சீகாமாமனு கூலா —வுமை
சார்ந்திடும் பல மாந்தருக்கரு
ளீந்திடுந் துறைவேந்தரெ விரு
தாளினை யென்றன் றேளிலருளியுந்

தாசனை யாண்டருள வீரே —தா தா
யூசுபுசாகி பென்பீரே

2. வாகை மேவிடும் லசகூரிருக்துற்று
மக்கா நகர்தனில் சென்றீர்
ஹக்கனிடம் நிலை நின்றீர் —ஸ்ந்த
வையகத்தினர் செய்யுமாசற
கையுயர்த்தியெ யுய்யு நாயகா
வங்கமே உங்கள் துங்கவ ஜீகா
வாசப்பதக் தருவீரே —தா தா
யூசுபு சாகிபென்பீரே

3. ஆரணப் பொருடேட்டும் ஷாகுல்ஹமீ
தாண்டகை செல்வக் குமாரா —அருள்
பூண்டஞானச் சுடர்மோரா —எழு
அந்தாத்தரும் வந்து பூவினில்
சிந்தனை செய்யுஞ் கந்தமலாடி
அன்பு கொண்டரு ளும்படியாயும் மேல்
ஆசைவைத்தே னருள்வீரே —தா தா
4. யூசுபு சாகிபென்பீரே

சிந்து இராகம் மஞ்சு நிகர் என்றமெட்டு

பஞ்சபூதந் தன்னை யறிந்து —நிதநிதமும் துதிமனமும்
பக்த்தி கொண்டிறையை தெரிந்து —வினைப்
பங்கமோடிட ஜங்கமேவிட
அங்கமீதிடை தங்கமாகிட
பண்புடன் கல்வத்திருந்தோரே துதிசிறந்தமதி நிறைந்த
பதவியூசுபு சாகிபென்பீரே

1. மஞ்சுலாவுஞ் சோலைகள் சூழும்—
நாகைப்பதியின்—ஏகன்குதுபாய்
வர்முமீறுன் சாகி பென்னூழும் —மகிழ்
மைந்தராக விசைந்தெல்லோர்க்குமே
ஐந்தருவென வந்தருள் தரும்

வள்ளலே யென்னுள்ள முற்றோரே
ஒலிகளுக்கும்—பதிகளுக்கும்
மன்னர் யூசுபுசாகிபென்பீரே

2. சீர்வா மருள்புரிபரமே கதிசிறந்த மதியுரைந்த
சித்தம் வைத்தெனை யாளுந்தா பரமே —எந்தன்
சிந்தை மீதினி லெந்த நேரமும்
மிந்துபோலொளி வந்திலங்கிட
திருவடி தந்தாண்டருள்வீரே—
அற்புதரான—பொற்பாத ஞான
செய்யிதீசூபு சாகிபென்பீரே

3. மண்டலம் புகழ்ந்திடுங் கோனே—
மைய்ய லதிக பைய்யலகத்துள்
வைதெதென் வாமருளுஞ் சீமானே —துதி
வரிசையாகிய குரிசிலென்னுடன்
பிரிசம் வைத்தரு டெரிசனந்தா
வந்து யெந்தனை யாண்டிடுவீரே—
மறையுகந்த—பொறை நிறைந்த
வள்ளல்யூசுபு சாகிபென்புபீரே

4. முத்தமிழ் கவியுரைத்திடும் ஷாகுல் ஹமீது சந்ததிமீது
முத்தியை தந்தாழவந்திடும் —நாதா
முச்சகம் புகழ்ரச்சகா வும
நிச்சையாழனை பட்ச்சம் வைத்தருள்
முதுரையை யோதிடுவீரே—முழுமதியே செழுங்கதிரே
முறுசி தீசுபுசாகிபென்பீரே

பதம்— இராகம் சுருட்டி அடதாளம்

கண்ணு லென்றுகாண்பனோ—ஆப்துல்
காதிற் ஹமீதொலியை

அனுபல்லவி

1. விண்ணோர்ப் புகழுந் திருப்பாதம் போற்றவும்
மெய்ஞ்ஞானியோர்க்குதவுங் காம்பற்றவும்
தண்ணார் மலர் முகங்கண்டு மகிழவும்
ஷாகுல் ஹமீதொலி நாயகம் வந்திட கண

2. வாசிப்பரியில் கவிமாலை யேற்றவும்
வாழுஞ் சுல்தானுல் நபிராவில்கூடவும்
தாஸீம் நபி இற சூலையான் காணவும்
ஷாகுல் ஹமீதொலி நாயகம் வந்திட கண்

3. நயனத்திடை நடுசூழ்ச்சங்தெரியவும்
நடனமிடும் வாலையை கண்டு புகழவும்
தயவருள் மெய்ஞ்ஞான வழியருள் புரியவும்
ஷாகுல் ஹமீதொலி நாயகம் வந்திட

4, ஆருதாரத்தை கடந்தங்கு செல்லவும்
அலிபிருலாமுருக் கொண்டு சிறக்கவும்
மாருததரிசனை யனுதினமீயவும்
மன்னர் ஹமீதொலி நாயகம் வந்திட

5. ஐவேடர் தம்மையடுத்து துறத்தவும்
அருளென்னும் ஞானப்பயிரை விளைக்கவும்
தைபுகலிமாவரு ளமுதூட்டவும்
ஷாகுல் ஹமீதொலி நாயகம் வந்திட

6. சங்கீத கீர்த்தனம் பாடித் துதித்திடும்
ஷாகுல் ஹமீது தன்மைந்தனை யாழவும்
இங்கீத ஞானத்தெளிவழிகாட்டவும்
யெங்கள் [illegible] தொலி நாயகம் வந்திட